ஹெக்டேருக்கு ரூ.2.50 லட்சம் லாபம் தரும் திசு வாழை

First Published : 21 Apr 2011 01:06:58 AM IST



விழுப்புரம்: திசு வாழை பயிரிட்டால் ஹெக்டேருக்கு ரூ.2.50 லட்சம் வரை நிகர லாபம் பெறலாம் என்று தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

÷தோட்டப் பயிர்களில் மிக முக்கியமான பழவகைப் பயிர் வாழை. வாழைப்பழம் உணவுப் பொருளாகவும், மருத்துவ குணம் வாய்ந்த பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

÷தமிழகத்தில் பலவகையான வாழை ரகங்கள் மாவட்டங்களுக்கேற்ப உற்பத்தி முறைகளுக்குத் தகுந்தால் போல் பயிரிடப்படுகின்றன.

÷இவற்றில் பச்சை வாழை ரகங்கள் மட்டும் 50 சதவீத அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. பூவன், ரஸ்தாளி, நெய்பூவன், நேந்திரன், மொந்தன் செவ்வாழை, கற்பூரவள்ளி போன்ற ரகங்களும் பயிரிடப்படுகின்றன.

÷இந்நிலையில் விழுப்புரம் மாவட்டத்தில் 743 ஹெக்டேர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் மொந்தன் வாழை மட்டும் சுமார் 60 சதவீத பரப்பளவுக்கு சாகுபடி செய்யப்படுகிறது. வாழை உற்பத்தி திறன் சராசரியாக ஹெக்டேருக்கு 47.74 மெ.டன் ஆகும்.

மொந்தன் வாழை சாகுபடியில் ஹெக்டேருக்கு ரூ.1.50 லட்சம் வரை தற்சமயம் விவசாயிகள் நிகர லாபமாக பெற்று வருகின்றனர்.

÷ஆனால் வளர்ந்து வரும் மக்கள்தொகை தேவைக்கேற்ப தற்சமயம் உள்ள உற்பத்தித் திறனை பெருக்குதலும், அதற்காக உயர் தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க வேண்டியதும் அவசியமாகிறது.

தரமான உற்பத்திக்கும், அதிக உற்பத்திக்கும் அதாவது சராசரியாக ஹெக்டேருக்கு 100 மெட்ரிக் டன் வரை உற்பத்தி செய்வதற்கும் திசு வளர்ப்பு வாழைக் கன்றுகளை உபயோகித்தல், சொட்டுநீர் உர பாசன முறைகளை பயன்படுத்துதல் போன்ற கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை தற்சமயம் பின்பற்றுதல் மிகவும் முக்கியமான தீர்வாக உள்ளது.

÷திசு வாழை சாகுபடியில் நன்கு கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை கையாளும் விவசாயிகள் கிலோ ரூ.4-க்கு விற்பனை செய்தாலும், ஹெக்டேரில் ரூ.2.50 லட்சத்துக்கும் மேல் நிகர லாபமாக பெருவதற்கு பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன.

÷இந்தப் பயன் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாவட்ட தோட்டக்கலைத் துறை மூலம் தரமான திசு வாழைச் செடிகள் மாவட்டத்தின் கோலியனூர், காணை, கண்டமங்கலம், கள்ளக்குறிச்சி, திருவெண்ணைய்நல்லூர், வானூர் போன்ற ஒன்றியங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

÷இதற்கான கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளும் மாவட்டத்திலுள்ள திசு வாழை சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

÷மேலும் திசு வாழைக்கு காற்றினால் ஏற்படும் சேதாரத்தைத் தவிர்க்க வாழை சாகுபடி செய்யும் வயல்களின் ஓரத்தில் அகத்தியை ஓரப்பயிராக இருவரிசைகளில் சாகுபடி செய்து காற்றின் வேகத்தை குறைப்பதன் மூலம் காற்றினால் வாழைக்கு ஏற்படும் சேதாரத்தை தவிர்க்கலாம்.

÷இந்த திசு வாழை பயிரிட ஏற்ற காலம் குறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் கூறியது:

÷திசு வாழை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் வரும் ஜூன், ஜூலை மாதங்களில் நமது மாவட்டத்தில் திசு வாழை செடிகளை நடவு செய்து, கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை கையாண்டு அதிக உற்பத்தி மற்றும் அதிக லாபம் மூலம் வீட்டுக்கும், நாட்டுக்கும் நலம் மற்றும் வளம் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

÷சொட்டுநீர் உர பாசன முறையில் திசு வாழை செடிகளை பருவத்தே நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் ஒன்றியத்தில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

**முந்திரி மரங்களில் தேயிலை கொசு தாக்குதல்**

First Published : 21 Apr 2011 01:13:20 AM IST



கடலூர்: கடலூர் மாவட்டத்தில் முந்திரி மரங்கள் தேயிலை கொசு என்ற பூச்சித் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன. இதனால் ஏற்பட்டுள்ள மகசூல் பாதிப்பு விவசாயிகளை பெரிதும் கவலையில் ஆழ்த்தி வருகிறது.

தமிழகத்தில் கடலூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் முந்திரி மரங்கள் அதிகளவில் உள்ளன. அதிலும் கடலூர் மாவட்டத்தில் தான் அதிகம். கடலூர் மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கரில் முந்திரி பயிரிடப்பட்டுள்ளன. ÷பண்ருட்டி வட்டத்தில் மட்டும் 50 ஆயிரம் ஏக்கரில் முந்திரி மரங்கள் உள்ளன. ஆண்டுக்கு சுமார் ரூ. 100 கோடிக்கும் அதிகமாக முந்திரிக் கொட்டைகள் கடலூர் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முந்திரிக் கொட்டை சீசன் தொடங்கி இருக்கிறது. ஆனால் விவசாயிகளை பெரிதும் ஏமாற்றும் விதத்தில் மகசூல் அமைந்துள்ளது. டிசம்பரில் பெய்த வடகிழக்குப் பருவ மழை காரணமாக, ஈரப்பதம் நீடித்ததால் முந்திரி மரங்கள் பூப்பதில், ஒரு மாதம் காலதாமதம் ஏற்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு ஏப்ரலில் வெயிலின் கடுமை அதிகமாக இருப்பதால், முந்திரி மரங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. கடும் வெயில் காரணமாக முந்திரிப் பூக்கள் பெருமளவு கருகியுள்ளன. மேலும் தேயிலை கொசு என்ற பூச்சித் தாக்குதலும், இந்த ஆண்டு அதிக அளவில் இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பூச்சிக் கொல்லி மருந்துகள்: பூச்சித் தாக்குதலில் இருந்து முந்திரி மகசூலை காப்பாற்ற என்டோசல்ஃபான், ரோகர் போன்ற மருந்துகளை, 15 நாளுக்கு ஒருமுறை அடிக்க வேண்டும் என்று, வேளாண் துறை பரிந்துரை செய்துள்ளது. அதன்படி விவசாயிகள் இந்த பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளித்துள்ளனர். எனினும் பாதிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இதுகுறித்து பெத்தாங்குப்பம் விவசாயி பழனிச்சாமி கூறுகையில், 3 ஏக்கரில் முந்திரி பயிரிட்டுள்ளேன். கடந்த ஆண்டு ஏக்கருக்கு 5 மூட்டை (400 கிலோ) முந்திரிக் கொட்டைகள் கிடைத்தன. இந்த ஆண்டு உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் என ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் வரை செலவு செய்துவிட்டேன். ரூ. 9 ஆயிரம் செலவு செய்து 3 முறை மருந்து அடித்து விட்டேன். தேயிலை கொசு என்ற பூச்சியும் கட்டுப்படவில்லை. வெயிலின் கடுமையும் அதிகமாக உள்ளது.

இதுவரை மொத்தம் ஒரு மூட்டை முந்திரிக் கொட்டைதான் கிடைத்து இருக்கிறது. தற்போது முந்திரிக் கொட்டை மூட்டைக்கு ரூ. 7,500 வரை விலை கிடைக்கிறது. ஆனால் முந்திரிக் கொட்டை விளைச்சல் பாதிப்பு, விவசாயிகளை கண்கலங்கச் செய்துள்ளது. ஒரு வாரத்துக்குள் கோடை மழை பெய்தால், பூச்சித் தாக்குதல் சரியாகும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார்.

வேளாண் அதிகாரி விளக்கம்: இதுகுறித்து வேளாண் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராமலிங்கத்திடம் கேட்டதற்கு, இந்த ஆண்டு டிசம்பர் மழை காரணமாக முந்திரி மரங்கள் பூப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. வெயிலின் கடுமை அதிகமாக இருப்பதன் காரணமாக, காலம் தாழ்ந்து உற்பத்தியான பூக்கள், கருகத் தொடங்கி விட்டன. தேயிலை கொசு தாக்குதலும் காணப்படுகின்றன. வேளாண் துறை பரிந்துரையின் பேரில் இதற்கான பூச்சிக் கொல்லி மருந்துகளை, 90 சதவீதம் விவசாயிகள் தெளித்து இருக்கிறார்கள்.

எனினும் பூச்சித் தாக்குதல் கட்டுக்குள் வரவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். தற்போது கோடை மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் காணப்படுகிறது. ஒரு மழை பெய்தால் போதும் நிலைமை சீராகும். புதிய பூக்கள் உற்பத்தியாகி, மகசூலை வழக்கம்போல் அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மழைதான் விவசாயிகளுக்குக் கைகொடுக்க வேண்டும் என்றார்.

**வசதி இருந்தால்தானே பயிரிட முடியும்?**

தினமணி 14.4.2011 நாளிதழில் வேளாண்மணியில் லாபம் தரும் சோற்றுக்கற்றாழை பற்றி வானளாவ புகழ்ந்து எழுதியது பாராட்டுக்குரியது.

எதற்கும் எந்த ஒரு பயிருக்கும், அது அறுவடையான பின் அதை உடனே விற்க ஒரு மார்க்கெட் அவசியம். விற்றவுடன் பணம் கைக்கு வரவும் வேண்டும்.

இந்த ஆலுவீரா எனும் சோற்றுக்கற்றாழை அறுவடையான 8 முதல் 10 மணி அவகாசத்துக்குள் விற்பனை செய்து விட வேண்டும்.

அதாவது அறுவடையான கற்றாழை அதன் மறு உற்பத்தியாகும்படியான போய் விட வேண்டும். ஆனால் அது சாத்தியமல்ல. குறிப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் அப்படி ஒரு வசதியில்லை.

÷இதற்கும் ஒரு வசதி ஏற்பட்டால்தானே சோற்றுக்கற்றாழையை பயிரிட முடியும்?

என். கனகசபாபதி, திருக்கோவிலூர்.

**பட்டுக்கூடு விலை திடீர் வீழ்ச்சி!: விவசாயிகள் கவலை**

First Published : 20 Apr 2011 11:19:54 AM IST

தருமபுரி, ஏப்.19: கோடை மழையால் பட்டுக்கூடு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால், மல்பெரி பயிரிடும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், வேலூர், திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் மல்பெரி சுமார் 35 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள், தருமபுரி, கிருஷ்ணகிரி, பென்னாகரம், பாலக்கோடு, சேலம், கோவை, உடுமலை, வாணியம்பாடி, திருவண்ணாமலை, திருச்சி உள்பட 16 இடங்களில் உள்ள அரசு பட்டுக்கூடு விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளில் 50 சதவீதத்துக்கும் மேல் தருமபுரி அரசு பட்டுக்கூடு அங்காடி மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

திண்டுக்கல், கோபி, திருவண்ணாமலை, சேலம், பென்னாகரம், கிருஷ்ணகிரி, வாணியம்பாடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து இந்த அங்காடிக்கு விவசாயிகள் பட்டுக்கூடுகளை கொண்டுவருகின்றனர்.

நாளொன்றுக்கு 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் கிலோ வரை இந்த அங்காடி மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்பு வரை வெண்பட்டுக்கூடு கிலோவுக்கு சராசரியாக ரூ.275-க்கும் மஞ்சள்பட்டுக்கூடு ரூ.225-க்கும் விற்பனை ஆனது.

கடந்த 1 வாரமாக பட்டுக்கூடு விலை குறைந்துள்ளது. வெண்பட்டுக்கூடு ரூ.250-க்கும், மஞ்சள் பட்டுக்கூடு ரூ.200-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தருமபுரி மாவட்ட பட்டுவளர்ச்சித் துறை உதவி இயக்குநர் கே.ஜெயவேல் கூறினார்.

தமிழகத்தில் திடீரென பெய்த கோடை மழையால் பட்டுக்கூடுகளின் தரம் குறைந்ததால் விலை குறைந்துவிட்டதாகவும், இது தாற்காலிகமானதுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

விலை குறைந்தபோதிலும் வரத்து குறையவில்லை. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் (2010-11) பட்டுக்கூடு உற்பத்தி அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 2,500 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 3,500 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தியாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இருப்பினும் கோடை மழை காரணமாக பட்டுக்கூடுகள் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**மஞ்சூரில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 20 Apr 2011 02:15:52 PM IST

மஞ்சூர், ஏப். 18: மஞ்சூர் பகுதியில் செவ்வாய்க்கிழமை வெயிலின் தாக்கம் குறைந்து சாரல் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குந்தா பகுதியில் எடக்காடு, எமராட்டு, இத்தலார், பிக்கட்டி, பெரியார் நகர், அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் முட்டைகோஸ், உருளைக்கிழங்கு, காரட், பீட்ரூட், பட்டாணி, டபுள் பீன்ஸ் உள்ளிட்ட மலை காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்கள் இல்லாத விவசாய கூலித் தொழிலாளிகள் அதிகளவில் மலை காய்கறி பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். கடந்த சில மாதங்களாக மஞ்சூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடுமையான வெயில் நிலவி வந்தது. மலை காய்கறிகளுக்கு தினமும் நீர் பாய்ச்ச வேண்டும். கோடை காலம் என்பதால் நீர் வரத்துக் குறைந்து மலை காய்கறிகள் வாடின. இதனால் மலை காய்கறி பயிரிட்டிருந்த விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில் கடந்த வாரம் மஞ்சூர் பகுதியில் திடீரென கோடை மழை பெய்தது.

ஆனாலும் தொடர்ந்து மழை பெய்யாததால், ஏற்கனவே வெயிலின் கடுமையால் வெப்பமடைந்திருந்த விளை நிலங்களில் அதிகளவு உஷ்ணம் ஏற்பட்ட நிலையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் திடீரென சாரல் மழை பெய்தது. இதனால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து பூமி குளிர்ந்தது. சுமார் 30 நிமிடங்கள் பெய்த இந்த சாரல் மழை மலை காய்கறி பயிர்களுக்கு உகந்தது என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பருவநிலை மாற்றங்களால் இயற்கை வளங்கள் குறைகின்றன: துணைவேந்தர் பி. தேவதாஸ் மனோகரன்**

First Published : 20 Apr 2011 10:06:41 AM IST

தஞ்சாவூர், ஏப். 19: பருவநிலை மாற்றங்களால் மக்கள் தொகைப் பெருக்கம், இயற்கை வளங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்றார் திருச்சி அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக துணைவேந்தர் பி. தேவதாஸ் மனோகரன்.

வல்லம் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் அதனை சரிசெய்வதற்கான தொழில்நுட்பம் குறித்த இருநாள் கருத்தரங்க தொடக்க விழாவில் அவர் மேலும் பேசியது:

தொழில்சாலைகள் மற்றும் உரஉற்பத்தி போன்றவைகளால் கரியமிலவாயு வெளியிடுதல் 28 சதம் அதிகமாக உள்ளது. 2020 ஆம் ஆண்டில் இந்த கரியமிலவாயு வெளியிடுதலை கட்டுப்படுத்துவது அவசியம் என்றார் தேவதாஸ் மனோகரன்.

கருத்தரங்கில் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக துணைவேந்தர் நல். ராமச்சந்திரன் பேசியது: உயர்க் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவரும் சுற்றுச்சூழல் குறித்த கல்வியறிவு அவசியம் பெற்றிருக்க வேண்டும். சூரியஒளி சக்தியால் இயங்கும் கருவிகளை பயன்படுத்துவது அவசியம். பெரியார் மணியம்மை பல்கலைக்கழக வளாகத்தில் வெளியேறும் திடக் கழிவுகளை பயோ மெத்தனேஷன் பிளாண்டில் உபயோகப்படுத்தி 60 கிலோவாட் அளவில் மின்சாரம் தயாரிக்கும் ஆய்வு நடைபெற்று வருகிறது என்றார் அவர்.

கருத்தரங்கில் முனைவர் ரா. சௌமியன், பேராசிரியர் டி. தையல்நாயகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**உயிரி மற்றும் நானோ தொழில்நுட்பம் விவசாயிகளை சென்றடைய வேண்டும்: வேளாண் துறை செயலர்**

First Published : 20 Apr 2011 02:09:41 PM IST

கோவை, ஏப். 19: உயிரி மற்றும் நானோ தொழில்நுட்பம் விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்று, தமிழக அரசின் வேளாண் துறை செயலாளர் ராமமோகன் ராவ் தெரிவித்தார்.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற, "வேளாண் துறையில் மகளிர் பங்களிப்பு மற்றும் சவால்களும் வாய்ப்புகளும்' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு மேலும் அவர் பேசியது (படம்):

வேளாண்துறையில் மகளிர் ஈடுபடுவது பாரம்பரியமாக இருந்து வருகிறது. இத்துறையில் ஏராளமான மகளிர் ஈடுபட்டு வந்தனர். இப்போது அந்த விகிதாசாரம் சற்று மாறியுள்ளது. பெருகி வரும் மக்கள்தொகை, உணவுத் தேவை ஆகியவை பெரும் சவாலாக உள்ளன. குறைந்துவரும் விவசாயம், நீர்ப் பற்றாக்குறை ஆகியவை வேளாண் தொழிலுக்கு சவாலாக உள்ளன.

அறிவியல் தொழில்நுட்பத்தை வேளாண்துறையில் புகுத்தி, உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இதற்கு உயிரித் தொழில்நுட்பம் மற்றும் நானோ தொழில்நுட்பம் ஆகியவற்றை வேளாண் துறையில் புகுத்தப்பட வேண்டும்.

இதனை விவசாயத்தில் பெருமளவில் ஈடுபட்டுவரும் மகளிரிடையே கொண்டுசெல்ல வேண்டும். இதன்மூலம் உற்பத்தியையும் வளர்ச்சியையும் எட்ட முடியும். அதேபோல தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய பொருள்கள் குறித்த சந்தை தகவலை வெளியிடலாம் என்றார்.

மாநில மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் ராமாத்தாள் பேசுகையில், பெண்கள் தொழில்முனைவோராகவும், முதலாளியாகவும் உயர, போதிய பயிற்சிகளை வேளாண்மைப் பல்கலைக்கழகம் அளிக்க வேண்டும். புதிய தொழில்நுட்பங்களை கிராமத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். விவசாயம் மட்டுமல்லாமல் பிற துறைகளிலும் மகளிர் பங்கு அவசியமாகும் என்றார்.

வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.முருகேசபூபதி பேசியது:

கடந்த 1971-ல் தொடங்கப்பட்ட வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் போதிய மாணவிகள் யாரும் இல்லை. பத்து ஆண்டுகள் கழித்து 1981-ல், இளநிலை படிப்பில் 23 சதவீத அளவுக்கு மாணவிகள் சேர்ந்தனர். 4 சதவீத அளவுக்கு முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகளில் சேர்ந்தனர்.

இப்போது 63 சதவீத அளவுக்கு இளநிலை பிரிவிலும், 51 சதவீத அளவுக்கு முதுநிலை பிரிவிலும் மாணவிகள் உள்ளனர். 47 சதவீத அளவுக்கு ஆராய்ச்சி படிப்புகளில் மாணவிகள் உள்ளனர்.

அதேபோல 1971-ல் 24 பெண் விஞ்ஞானிகளே இருந்தனர். இப்போது 387 பெண் விஞ்ஞானிகள் உள்ளனர். அதுமட்டுமில்லாமல் 18 பேர் துறை தலைவர்களாகவும் உள்ளனர். மகளிர் கல்விக்கு இங்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது என்றார்.

மதுரை வேளாண் ஆராய்ச்சி கல்லூரி டீன் பி.பானுமதி, திருவள்ளுவர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சுசீலா திருமாறன், துணை ஆணையர் காமினி, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் மணிமேகலை, சக்தி மசாலா நிறுவன இயக்குநர் சாந்தி துரைசாமி உள்ளிட்டோர் பேசினர்.

**கோழிகளின் தீவன எடுப்பு உயர வாய்ப்பு: வானிலை ஆலோசனை மையம் தகவல்**

First Published : 20 Apr 2011 11:19:34 AM IST

நாமக்கல், ஏப். 19: மழை காரணமாக குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுவதால் கோழிகளின் தீவன எடுப்பு உயர வாய்ப்பு உள்ளதாக நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

கேரள கடற்பகுதியில் காற்றின் சுழற்சி உருவாகியுள்ளது. இதனால் அடுத்த நான்கு நாள்களுக்கு நாமக்கல் மாவட்ட வான் பகுதியில் அதிகப்படியான மேக மூட்டம் உருவாக வாய்ப்பு

ஏற்பட்டுள்ளது. மாலையில் ஆங்காங்கே மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெப்பத்தின் கடுமை சற்று குறையும்.

மேகமூட்டத்துடன் மழை, அதிகபட்ச வெப்பநிலை குறைவு, குளிர்ச்சியான காலநிலை ஆகியவை கோழிகளில் வெப்ப அயற்சியால் ஏற்படும் ஆபத்தை குறைக்கும்.

மேலும், கோழிகளின் தீவன எடுப்பு உயரும் வாய்ப்புமும் உருவாகியுள்ளது.

மழை மற்றும் குளிர்ந்த காற்று வீசும் வரை தீவனத்தில் கோடை வெப்பத்தை சமாளிக்க உதவும் மருந்துகளையும், தாது உப்புகளையும் சேர்த்து வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை:

கோடை மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால் பயிறு வகை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், நிலத்தை உழவு செய்து விதைப்புக்கு தயார் செய்ய வேண்டும். மரவள்ளியில் மாவுப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த 1 ஏக்கருக்கு 30 ஒட்டுண்ணிகளை விட வேண்டும். வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒட்டுண்ணிகளை பெற்றுக் கொள்ளலாம். தொடர்புக்கு: 04286-266345, 266244.

**ரப்பர் விலையேற்றத்தால் தென்னைகளை அழித்து ரப்பர் நடவு செய்யும் விவசாயிகள்**

First Published : 20 Apr 2011 11:08:48 AM IST

குலசேகரம், ஏப். 19: ரப்பர் விலையேற்றம் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு ரப்பர் நடவு செய்யப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பு வரை சுமார் 24,200 ஹெக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி நடைபெற்று வந்தது. இப்போது அது படிப்படியாகக் குறைந்துவிட்டது.

குறிப்பாக, ரப்பர் சாகுபடிக்கு உகந்த மண் வளம் கொண்ட கல்குளம், விளவங்கோடு, தோவாளை உள்ளிட்ட பகுதிகளில் தென்னைகள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன.

ரப்பருக்கு கிடைக்கும் அதிக விலை, தென்னை மரங்களில் ஏறி தேங்காய் பறிப்பதற்கான ஆள் பற்றாக்குறை, குரங்குகளால் ஏற்படும் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இவை அழிக்கப்படுகின்றன.

தென்னை தொடர்ந்து அழிக்கப்படுவதால் இளநீர், தேங்காய், தேங்காய் எண்ணெய் உள்ளிட்டவற்றின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இது குறித்து, முன்னோடி விவசாயி பி. ஹென்றி கூறியதாவது:

ரப்பர் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் கல்குளம், தோவாளை, விளவங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் ரப்பர் நடவு தொடங்கப்பட்டுள்ளது.

இதில் கன்னியாகுமரி மாவட்டத்தின் நெற்களஞ்சியம் என்று கூறப்படும் நாஞ்சில் நாட்டுப் பகுதிகளிலும் இப்போது ரப்பர் நடவு தொடங்கப்பட்டுள்ளது.

ரப்பர் நடவு செய்யப்படுவதால் விவசாயிகள் நீர்நிலைகளின் முக்கியத்துவத்தை புறந்தள்ளுகின்றனர். இதனால் மாவட்டத்திலுள்ள நீர்நிலைகள் முக்கியத்துவம் இழந்து வருகின்றன.

மேலும் நெல், வாழை, தென்னை விவசாயம் பாதிக்கப்படுவதால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் சூழலும் உருவாகியுள்ளதுடன், கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்படுகின்றன.

தண்ணீர் செழிப்பான பகுதிகள் உள்பட பல பகுதிகளில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டு அப்பகுதிகளில் ரப்பர் மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகின்றன. விவசாயிகள் மாற்றுப் பயிர் சாகுபடியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் ரப்பர் நடவு செய்யப்பட்டு, ரப்பரின் விலையில் பெரும் சரிவு ஏற்பட்டால் விவசாயிகள் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாக நேரிடும்.

எனவே, மரபுரீதியாக மலைப்பாங்கான இடங்களில் மட்டுமே ரப்பர் நடவு செய்ய வேண்டும். நெல், வாழை, தென்னைகளை அழித்துவிட்டு ரப்பர் நடவு செய்ய அனுமதிக்கக் கூடாது என்றார் அவர்.

**கொடுவா மீன் வளர்ப்புப் பயிற்சி**

First Published : 20 Apr 2011 02:23:40 PM IST

காரைக்கால், ஏப். 19: காரைக்கால் பகுதி விவசாயிகளுக்கு நன்னீர் குளத்தில் கொடுவா மீன் வளர்ப்புப் பயிற்சி திங்கள்கிழமை அளிக்கப்பட்டது.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையமும், சென்னையைச் சேர்ந்த மத்திய கடல் முகத்துவார மீன் வளர்ப்பு மையமும் இணைந்து அறிவியல் நிலைய வளாகத்தில் நன்னீர் குளத்தில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சியை அளித்தன.

பயிற்சியை நிலையத்தின் முதல்வர் (பொ) முனைவர் கோ. விஜயகுமார் தொடக்கிவைத்துப் பேசினார். நேரடி பயிற்சிக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சியில், மத்திய கடல் முகத்துவார மைய முதுநிலை அறிவில் அறிஞர் முனைவர் எஸ்.பி.திருநாவுக்கரசு, கொடுவா மீன் வளர்ப்பு முறைகள், அதன் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாய் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

குளத்தில் வளர்க்கும் முறை அல்லாமல் குளத்திலேயே கூண்டு கட்டி கொடுவா மீன் வளர்ப்பு முறை குறித்து முனைவர் கைலாசம் விளக்கினார். கூண்டில் கொடுவா குஞ்சுகளுக்கு உணவு

அளித்தல், கொடுவா மீன் குஞ்சுகளை பராமரித்தல் குறித்து விவசாயிகளுக்கு மையத்தின் விஞ்ஞானிகள் விளக்கமளித்தனர்.

இப் பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.


கொடுவா மீன் வளர்க்க தேவையான நிலப்பரப்பு, தேவைப்படும் தீவனம், பராமரிக்கத் தேவையான தொழிலாளர்கள், கொடுவா மீன் வளர்ப்பு கால அளவு, அறுவடை காலம், அறுவடை செய்த மீன் ஏற்றுமதிக்கான இடம் உள்ளிட்ட விவரங்களை விவசாயிகள் கேட்டறிந்தனர்.

ஏற்பாடுகளை மீன்வளத் துறை உதவி ஆய்வாளர் ஜெ. முருகேசன் செய்திருந்தார்.

தினமலர்

**5லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு ஒப்புதல்**

ஏப்ரல் 21,2011,01:51



புதுடில்லி:மத்திய அரசு, 5 லட்சம் டன்சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் சர்வ தேசசந்தையில்சர்க்கரை விலை குறைந்துள்ளதால், ஏற்றுமதியில் மிகப் பெரிய

அளவில் லாபம் இருக்காது என வணிகர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டின்சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளதால், அதன் விலை கட்டுக்குள் உள்ளது. இதன் காரணமாக,சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய உணவு அமைச்சகத்தின், அமைச்சரவைக் குழு கடந்த மாதம் அனுமதி வழங்கியது. ஆனால் இது குறித்த அரசாணை தற்போது தான் வெளியிடப்பட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில்சர்வதேசசந்தையில்சர்க்கரை விலை 11சதவீதம்சரிந்து ஒரு டன் 627 டாலராக குறைந் துள்ளது. இதனால் வட மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளின் ஏற்றுமதி லாப வரம்பு குறைந்த அளவிற்கே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.அதேசமயம், உத்தரபிரதேசத்தை விட, மகாராஷ்ட்ர ஆலைகளின் சர்க்கரை விலை குறைவாக உள்ளதால், ஏற்றுமதி மூலம் இந்த ஆலைகள் கணிசமான லாபத்தை பெற முடியும். மகாராஷ்ட்ராவில்,சர்க்கரை ஆலைகளுக்கு அருகிலேயே துறைமுகங்கள் அமைந்துள்ளதும் லாப வரம்பை அதிகரிக்க உதவும் என,

இந்தியசர்க்கரை ஆலைகள் கழகத்தின் தலைமை இயக்குனர் அபினேஷ் வர்மா தெரிவித்தார். மத்திய அரசு,சர்க்கரை ஏற்றுமதிக்கு காலம் கடந்து அனுமதி வழங்கியுள்ளபோதிலும், இந்த நடவடிக்கையால் ஆலைகளின் வருவாய் உயரும் என்றும் அவர் கூறினார்.

**நடப்பு காலண்டர் ஆண்டின் முதல் காலாண்டில்நுகர்பொருள் நிறுவனங்களின் வருவாய் உயர வாய்ப்பு**

ஏப்ரல் 21,2011,01:51



மும்பை:நடப்பு 2011ம் காலண்டர் ஆண்டின், ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலாண்டில், நுகர்பொருள் துறை நிறுவனங்களின் வருவாய் வளர்ச்சி நன்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நுகர் பொருள் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்கள், அவற்றின் தயாரிப்புகளின் விலையை உயர்த்திய நிலையிலும், இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது.

இதனால், இக்காலாண்டில், இந்நிறுவனங்களின் வருவாய் வளர்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.இருப்பினும், மூலப்பொருள்களின் விலை உயர்வால், இந்நிறுவனங் களின் லாப வரம்பு குறையக் கூடும் என்ற மதிப்பீடும் உள்ளது. நுகர்பொருள் துறையில், ஈடுபட்டு வரும் முன்னணி 8 நிறுவனங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. நடப்பாண்டின் முதல் காலாண்டில், இந்நிறு வனங்களின் வருவாய், சென்ற ஆண்டின் இதே காலாண்டை விட 18.7 சதவீதம் வளர்ச்சி காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதே காலாண்டில், இவற்றின், நிகர லாபம் 13.7 சதவீதம் உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இருப்பினும், மூலப் பொருள்களின் விலை உயர்வால், ஆண்டு கணக்கில் ஒப்பிடும் போது, இந் நிறுவனங்களின் லாப வரம்பு 70 புள்ளிகள் குறைந்து, 15 சதவீதம் என்ற அளவில் இருக்கும் என தெரிகிறது. நுகர்பொருள் துறை நிறுவனங்களின், ஒட்டுமொத்த விற்றுமுதலில், மூலப்பொருள்களுக்கான செலவினம் 40-50 சதவீதம் என்ற அளவில் உள்ளது. எனவே, இவற்றின் வருவாய் அதிகரித்ததாலும், லாப வரம்பு வளர்ச்சி குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாரிக்கோ, தாபர் மற்றும் ஏசியன் பெயின்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள், மூலப்பொருள்களின் விலை உயர்வை எதிர்கொள்ளும் வகையில், குறிப்பிட்ட சில தயாரிப்பு பொருள்களின் விலையை உயர்த்தின. இருப்பினும், சில நிறுவனங்கள், இத்துறையில் நிலவும் கடுமையான போட்டியால், மூலப்பொருள்களின் விலை உயர்வுக்கு ஏற்ப, தயாரிப்பு பொருள்களின் விலையை அதிகரிக்க இயலாத சூழ்நிலையும் உள்ளது.மூலப்பொருள்களின் விலை உயர்வு மற்றும் போட்டி ஒருபுறமிருக்க, பல புதிய நிறுவனங்களின் வருகையும், இத்துறை நிறுவனங்களின் வருவாய் மற்றும் லாப வரம்பை பாதிப்பதாக உள்ளது. எனவே, நுகர்பொருள் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், அவற்றின் லாப வரம்பு வளர்ச்சிக்கு, முக்கியத்துவம் அளிப்பதை விட, விற்பனையை அதிகரிப்பதிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றன. நுகர்பொருள் துறையில், முன்னணியில் உள்ள இந்துஸ்தான் யூனிலீவர் மற்றும் ஐ.டி.சி. ஆகிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்களின் போட்டியை எதிர்கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, மேற்கண்ட இவ்விரு நிறுவனங்களும், விளம்பரம் மற்றும் சந்தைப் படுத்துதல் வாயிலாக, அவற்றின் தயாரிப்பு களை சிறந்த முறையில், விற்பனை செய்து வருகின்றன. இந்துஸ் தான் யூனிலீவர் நிறுவனத்தின் வருவாய், நடப்பு காலண்டர் ஆண்டின் முதல் காலாண்டில், 15 சதவீத அளவிற்கு வளர்ச்சி காணும் என்றாலும், இக்காலா ண்டில், இந்நிறுவனத்தின் நிகர லாப வளர்ச்சி 3 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படு கிறது.புகையிலை, நுகர்பொருள்கள், ஓட்டல் நடவடிக்கைகள் என பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வரும், ஐ.டி.சி. நிறுவனத்தின் வருவாய், இக்காலாண்டில் 26 சதவீதம் என்ற அளவிலும், விற்றுமுதல் 17 சதவீதம் என்ற அளவிலும் வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டுள்ளது.அண்மை காலமாக, குறிப்பிட்ட சில மூலப் பொருள்களின் விலை குறைந்துள்ளது. ஆனால், கச்சா எண்ணெய் விலை உயர்வு இடர்பாடு அளிப்பதாகவே உள்ளது. நுகர்பொருள் துறை நிறுவனங்கள், போட்டிகளை எதிர்கொண்டு, விற்பனையை அதிகரித்து,

சந்தை பங்களிப்பை தொடர்ந்து, தக்க வைத்து கொள்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அதிக விளம்பர செலவினங்களும், இந்நிறுவனங்களின் லாப வரம்பு குறைவதற்கு காரணமாக உள்ளது என ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாழைபயிருக்கு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம்:சாகுபடியாளர் சங்கத்தினர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,03:16 IST

நாமக்கல்: "விவசாயிகளை பெருத்த நஷ்டத்தில் இருந்து பாதுகாக்கும் வகையிலும், அதிக கடன் சுமையில் இருந்து மீண்டு வரவும், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தை தமிழகம் முழுவதும் வாழைப்பயிருக்கு விஸ்தரிப்பு செய்ய வேண்டும்' என, வாழை சாகுபடியாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்திய அளவில் பணப்பயிர்களில் ஒன்றாக வாழை கருதப்படுகிறது. வருமானம் வரக்கூடியதாக இருப்பதால், விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்து வருகின்றனர். நாமக்கல் மாவட்டத்தில் காவிரிகரையோரப் பகுதியில் அதிக அளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், 300 ஏக்கருக்கும் அதிகமாக வாழை சாகுபடி செய்துள்ளனர். அவ்வாறு இருக்கும் நிலையில், சூறாவளி காற்றிலும், பருவ மழையிலும் வாழைகள் முறிந்து விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டததை ஏற்படுத்துகிறது. அப்போது விவசாயிகள் கடும் துயரத்துக்கு ஆளாகின்றனர். ஐந்து ஆண்டுகளில் கிடைக்கும் வருமானத்தை ஒரே ஆண்டில் இழக்கும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. அதை கருத்தில் கொண்டு தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் தமிழக அரசின் பங்களிப்பு பிரிமியத்தோடு அந்தந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. இந்நிலையில், வாழை பயிர் செய்யும் மாவட்டங்களில் அதிகம் சாகுபடி செய்துள்ள பகுதிகளில் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவில்லை. அதனால், வாழை சாகுபடியாளர்கள் ஆண்டு தோறும் காற்றினால் முறிந்த வாழைக்கு இழப்பீடு வழங்க கோரி தமிழக அரசை வலியுறுத்துவது வாடிக்கையாக உள்ளது. அதிக அளவு சாகுபடி செய்யும் தோட்டக்கலை பயிரான வாழை, தமிழகத்தில், மூன்று லட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளது. வாழைப்பயிருக்கு சராசரியாக ஒரு ஆண்டுக்கு, 45 ஆயிரம் ரூபாய் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை சாகுபடி செய்கின்றனர். மேலும், காற்றினால் வாழை முறிந்துவிடாமல் இருக்க மூங்கில், சவுக்கு, தைலமரம் போன்ற குச்சிகளை முட்டுக்கொடுப்பதற்காக அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இருந்தும் குழைதள்ளும் வாழைக்கு முட்டுக்கொடுத்தும், சூறாவளிக் காற்றின் வேகம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் தாண்டும்போது வாழை காற்றில் முறிந்து விழுவதை தவிர்க்க முடியாது. அதை கருத்தில் கொண்டு சிறப்பு திட்டமாக தமிழகம் முழுவதும் வாழை பயிருக்கு

தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்ய அரசு வழிவகை செய்ய வேண்டும். தனியார் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் பயிர் காப்பீட்டு திட்டத்தை ஆர்வமாக வரவேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "தமிழகத்தில் முக்கிய பணப்பயிராக உள்ள வாழை சாகுபடி, மாறிவரும் இயற்கை சூழ்நிலைக்கு ஏற்ப விவசாயிகளை பெருத்த நஷ்டத்தில் இருந்து பாதுகாக்கும் வகையிலும், இயற்கை சீற்றத்தில் இருந்து பொருளாதார ரீதியாக தற்காத்துக்கொள்ளவும், அதிக கடன் சுமையில் இருந்து மீண்டு வரவும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தை தமிழகம் முழுவதும் வாழைப்பயிருக்கு விஸ்தரிப்பு செய்ய வேண்டும்' என, வாழை சாகுபடியாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தேங்காய் உற்பத்தி பாதிப்பு: இளநீர் விலை இரட்டிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,01:26 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளதால், தேங்காய் மற்றும் இளநீர் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது.தமிழகத்தில் தேங்காய் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாவட்டங்களில் தர்மபுரி மாவட்டமும் ஒன்று. மாவட்டத்தில் காரிமங்கலம், பாலக்கோடு, வெள்ளிசந்தை, மாரண்டஹள்ளி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதியில் அதிக அளவில் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. குறிப்பாக, மாரண்டஹள்ளி, வெள்ளிச்சந்தை பகுதியில் உற்பத்தியாகும் தேங்காய் உருவத்தில் பெரிதாக இருக்கும். அந்த பகுதியில் உற்பத்தியாகும் தேங்காய்க்கு வெளி மாநிலங்களில் அதிக அளவில் வரவேற்பு உண்டு. ஆண்டுதோறும் கோடை கால விற்பனையை குறி வைத்து, தென்னை விவசாயிகள் காய்களை அறுடை செய்து விற்பனை செய்வர். கோடை காலத்தில், மஹாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்து அதிக அளவில் வியாபாரிகள் தர்மபுரி மாவட்ட விவசாயிகளிடம் முன் கூட்டியே பணம் கொடுத்து இளநீருக்காக தேங்காய்களை அறுவடை செய்து, விற்பனைக்கு எடுத்து செல்வர். சில ஆண்டுகளாக தர்மபுரி மாவட்டத்தில் தென்னைகளில் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் அதிகரித்து இருந்தது. இந்நோய் தாக்கிய மரங்களில் தென்னை மட்டை மற்றும் காய்களில் உள்ள பசுமையான ஈரத்தன்மைகளை சிலந்தி பூச்சிகள் உறிஞ்சி விடுவதால், காய்ந்து சருகாகி மரங்கள் காட்சி அளிக்க துவங்கியது. இந்நோயை கட்டுப்படுத்த, 10 ஆண்டுக்கும் மேலாக விவசாயிகள் முயற்சித்த போதும், நோய் தாக்குதலை கட்டுப்படுத்த முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். வழக்கமாக கோடை கால இளநீர் விற்பனை மே, ஜுன் மாதத்தில் கூடுதலாக இருக்கும். தற்போது மார்ச் இறுதியிலிருந்து விற்பனை அதிகரித்துள்ளது. நோய் தாக்குதல், பருவ மழை தவறியதாலும், போதிய தண்ணீர் வசதியில்லாமல் தேங்காய் உற்பத்தி கடந்த காலங்களை விட, 40 முதல், 60 சதம் வரையில் வீழ்ச்சி அடைந்தது. கடந்த காலங்களில் ஒரு அறுவடை பருவத்தில் ஒரு மரத்தில்,

40 முதல், 50 தேங்காய் அறுவடை நடக்கும். இந்தாண்டு, ஒரு மரத்துக்கு அதிக பட்சம், 10 தேங்காய்கள் கூட அறுவடைக்கு கிடைப்பது அரிதாகி போனது. முன் கூட்டியே கோடை கால இளநீர் விற்பனை துவங்கியதால், இளநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இளநீர் தேவைக்கு அதிக அளவில் காய்கள் அறுவடை செய்யப்பட்டதால், தேங்காய் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளூர் சந்தைகளில் தேங்காய்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. கடந்த மாதம், இளநீருக்காக பல தோட்டங்களில் தேங்காய்கள் கூட அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வரத்துவங்கியது. தர்மபுரியில் ஒரு இளநீர் 10 முதல் 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெயில் உக்கிரம் மற்றும் இளநீர் தட்டுப்பாடு காரணமாக இளநீர் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் அதிக அளவில் வெளி மாநிலங்களுக்கு தேங்காய், இளநீர் விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது, உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, விலை ஏற்றம் காரணமாக தென்னை விவசாயிகள் உள்ளூரில் விற்பனை செய்யத்துவங்கியுள்ளனர்.

**மத்திமீன் வரத்து அதிகரிப்பு: கடலூர் மீனவர்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,02:02 IST

முதுநகர்:கடலூரில் மத்திமீன் வரத்து அதிகரிப்பால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மீன்பிடி தடை காலம் அமலில் இருப்பது வழக்கம். இந்த ஆண்டு தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஏப்ரல் 15 முதல் மே மாதம் 30ம் தேதி வரை 45 நாட்கள் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.இக்காலங்களில் மீனவர்கள் விசைப்படகுகளில் சென்று மீன் பிடிக்க தடை செய்யப்பட்டுள்ளது. கட்டுமரம், பைபர் படகுகளில் சென்று குறிப்பிட்ட வகை வலைகளை கொண்டு மீன் பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று கடலூர் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பைபர் மற்றும் கட்டுமரங்களில் மீன் பிடிக்க மீனவர்கள் கடலுக்குள் சென்றனர்.அரசு தடை செய்யாத வலைகளைக் கொண்டு பிடித்ததில் 30 டன்னுக்கும் மேற்பட்ட மத்தி மீன்கள் சிக்கின. இந்த மீன்கள் தமிழகம் மட்டுமின்றி கேரள மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டன. மத்தி மீன்கள் அதிகளவில் சிக்கியுள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மாடுகளுக்கு "கோமாரி நோய்' தாக்கம்:தமிழக பருவ நிலையில் திடீர் மாற்றம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,01:29 IST

சேலம்: தமிழகத்தில் பருவநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக, பசு மாடுகளுக்கு, "கோமாரி' நோய் தாக்கம் அதிகரித்துள்ளது, மாடு வளர்ப்போர் மத்தியில் பீதியை ஏற்படுத்தி உள்ளது. "நோய் தாக்குதலால் இறக்கும் மாடுகளின் இறைச்சியை உண்ண வேண்டாம்' என, கால்நடைத்துறை டாக்டர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கால்நடைத்துறையினரின் கணக்கின் படி தமிழகத்தில், 90.08 லட்சம் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. மாடு வளர்ப்பில் ஈரோடு, திருநெல்வேலி, சேலம் மாவட்டங்கள் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன. தமிழகத்தில் கோடை காலம் துவங்கியதை குறிக்கும் வகையில், கடந்த வாரம் வரை வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்தது. சில நாட்களாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. பருவ நிலையில் ஏற்பட்டுள்ள இந்த திடீர் மாற்றத்தால், மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்படாத நிலையில், மாடுகள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன. குறிப்பாக, கோமாரி நோயின் தாக்குதலால் மாடுகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் சேலம் மாவட்டத்தில், 100க்கும் மேற்பட்ட மாடுகள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்து உள்ளன. சேலம் சுகவனேஸ்வரர் கோவிலில் உபயதாரரால் நன்கொடையாக வழங்கப்பட்ட பசுமாடு, இந்நோயின் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. இந்த மாட்டுக்கு சேலம் கால்நடைத்துறை டாக்டர் அருட்பிரகாசம் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகிறார். கோவில் மாடு நோயின் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பது, பக்தர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி உள்ளது. நோய் தாக்குதலுக்கு உள்ளான மாடுகளுக்கு தொடர் காய்ச்சல், வாய் மற்றும் நாக்கில் கொப்பளங்கள் காணப்படுகின்றன. அத்துடன் வாயிலிருந்து அதிக அளவில் உமிழ்நீரும், மூக்கில் இருந்து சளியும் தொடர்ந்து வடிந்து கொண்டுள்ளது. ஒரு வாரங்களுக்கு மேல் ஆகியும் மாடுகளால் தீவனம் உண்ண முடியவில்லை. இந்நோயின் தாக்கம் மேலும் அதிகரித்து மாடுகள் இறக்கும் நிலையை எட்டியுள்ளது. மாட்டின் வயிறு உள்ளிட்ட பகுதிகளில் புண் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தி வருகிறது. "மாடுகளை தாக்கும், "கோமாரி' நோயை தடுக்க அரசு விரைந்து நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்' என, மாடு வளர்ப்போர் அரசுக்கு வேண்டுகோள்

விடுத்துள்ளனர். இந்நோய் குறித்து கால்நடைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தற்போது சேலம் மாவட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்நோய் ஆப்தோ வைரஸ் என்னும் நச்சுயிரியால் மாடுகளுக்கு ஏற்படுகிறது. இந்நோயை உருவாக்கும் நச்சுயிரி 7 வகைகளையும், 68 துணை வகை நச்சுயிரிகளையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு நோய் கிளர்ச்சியின் போதும் வேறு வேறு வகையான கோமாரி நோய் நச்சுயிரி தாக்குவதற்கு வாய்ப்புள்ளதால், இந்நோய் கால்நடை மருத்துவ துறைக்கு கடும் சவாலை கொடுத்து வருகிறது. நோயுற்ற கால்நடைகளின் உமிழ் நீர், சிறுநீர், பால், சாணம் மற்றும் அவை உபயோகித்த தண்ணீர், வைக்கோல், மேய்ச்சல் இடம், தீவனத்தட்டுகள், தீவனம் மற்றும் காற்று மூலம் நேரடியாகவோ அல்லது நோயுற்ற மாடுகளை கவனித்து வரும் பண்ணையாள், பால் கறப்பவர் மற்றும் பண்ணையிலுள்ள வாகனங்கள் மூலமும் இந்நோயினை பரப்பும் கிருமிகள் பரவுகிறது. இந்நோய் மாடுகளை தாக்கும் முன்னரே எந்த வகை நச்சுயிரியால் நோய் உண்டாகின்றதோ அதற்கு எதிரான தடுப்பூசி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக போட்டுக் கொள்ள வேண்டும். இந்நோயின் தாக்குதலுக்கு உள்ளாகும் கன்றுக் குட்டிகள், மாடுகளின் இறைச்சிகளின் மூலம் இந்நோய் மனிதர்களை தாக்கும் அபாயம் உள்ளது. நோயின் தாக்குதலுக்கு உள்ளான மாடுகளின் இறைச்சியை மனிதர்கள் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**உயிரியல் பூங்காவில் மின்வெட்டு:தண்ணீருக்கு தவிக்கும் விலங்குகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,02:35 IST

சேலம்: சேலம் குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவில் தொடர் மின்தடையால், பூங்காவில் உள்ள விலங்குகள், பறவைகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியாமல் ஊழியர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். சேலம் வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சேலம் குரும்பப்பட்டியில் வன உயிரியல் பூங்கா செயல்பட்டு வருகிறது. இப்பூங்காவை சேலம் வனத்துறை அதிகாரிகளும், ஊழியர்களும் பராமரித்து வருகின்றனர். செவ்வாய்க்கிழமை தவிர மற்ற வேலை நாட்களில் பூங்கா காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்படுகிறது. இப்பூங்காவில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு மக்களையும் கவரும் விதத்தில், நட்சத்திர ஆமைகள், குரங்கு, விதவிதமான கிளிகள், புறாக்கள், முதலைகள், மான்கள், வெள்ளை மயில்கள் உள்ளிட்ட விலங்குகள் உள்ளன. தற்போது, சேலம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், பூங்காவுக்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள்

அதிகரித்து வருகிறது. காலை 9 மணி முதலே பொதுமக்கள் பலரும் தனது குழந்தை, உறவினர்களுடன் பூங்காவில் குவிய தொடங்கி விடுகின்றனர். பூங்காவில் உள்ள முதலைகள், ஆமைகள், வெளிநாட்டு பறவைகள், குரங்குகள் ஆகியவை தண்ணீருக்குள் நீந்தி விளையாடுவது பெரும்பாலான குழந்தைகளையும், பெரியவர்களையும் கவர்ந்து வந்தது. தற்போது, பூங்காவில் தொடர்ந்து பல மணி நேரம் அறிவிக்கப்படாமல் மின்சாரம் நிறுத்தப்படுவதால், பூங்காவில் உள்ள முதலை, ஆமை, வெளிநாட்டு பறவைகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய முடியாமல் வன ஊழியர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். கோடை வெயிலில் தண்ணீர் இல்லாமல், வன விலங்குகள் தவித்து வருகின்றன. பெரும் சிரமத்துக்கிடையில் பக்கெட், குடம் ஆகியவற்றில் தண்ணீரை பிடித்து, பூங்காவில் உள்ள விலங்குகளின் தாகத்தை வன ஊழியர்கள் தீர்த்து வருகின்றனர். அப்போதும் விலங்குகளுக்கு தேவையான தண்ணீர் தேவையை அவர்களால் பூர்த்தி செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர்.இது குறித்து வன அதிகாரிகள் கூறியதாவது:பல மாதங்களாக பூங்காவில் அறிவிக்கப்படாத மின் தடை ஏற்படுகிறது. பூங்காவுக்கு வரும் பார்வையாளர்களுக்கு நுழைவு சீட்டினை வழங்குவதில் தடை ஏற்படுகிறது. மோட்டார் மூலமே, பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல மணி நேரம் மின் தடை ஏற்படுவதால், விலங்குகளுக்கு போதுமான அளவுக்கு தண்ணீரை விநியோகிக்க முடிவதில்லை. கோரிமேடு மின்அலுவலகத்தில் பல முறை புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொடர் மின்தடையை தடுக்க, மின் ஊழியர்கள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விலங்குகளுக்கு தடையில்லாத தண்ணீரை விநியோகிக்க முடியும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**சோலையாறு அணை வறண்டு குளம் போல் மாறியது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,01:11 IST

வால்பாறை: சோலையாறு அணை வறண்டு குளம் போல் மாறியதால் பவர் ஹவுஸ் இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வால்பாறையில் உள்ள சோலையாறு அணை நிரம்பியதும், சேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கும், காடம்பாறை நிரம்பியவுடன், அப்பர் ஆழியாறு வழியாக ஆழியாருக்கும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இது தவிர காடம்பாறை அணையிலிருந்து சுழற்சி முறையில் நாள் தோறும் 400 மெகாவாட் மின்சாரமும், சோலையாறு அணையிலிருந்து நாள் தோறும் 70 மெகாவாட் மின்சாரமும் தயாரிக்கப்படுகிறது. கடந்த ஐந்து மாதங்களாக வால்பாறையில் மழைப்பொழிவு முற்றிலுமாக குறைந்து, கோடை வெயில் கொளுத்துவதால் பி.ஏ.பி.,அணைகள் அனைத்தும் வறண்டு போயின. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 14.12 அடியாக இருந்தது. அணைக்கு

விநாடிக்கு 62 கன அடி தண்ணீர் மட்டுமே வருகிறது. அணை வறண்டு குளமாக மாறியதால், கடந்த இரண்டு மாதங்களாக சோலையாறு அணையிலிருந்து பவர் ஹவுஸ் இயக்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. "தென் மேற்குப்பருவ மழை பெய்யத்துவங்கினால் தான் பவர் ஹவுஸ்கள் வழக்கம் போல் இயங்குவதுடன், பரம்பிக்குளம் அணைக்கும் தண்ணீர் திறந்துவிடப்படும்' என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**முக்கனிகளில் முதல் கனி "மா': குமரியில் விளைச்சல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,02:20 IST

அருமனை: குமரி மாவட்டத்தில் கடந்த சீசனை விட மாங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் மாம்பழ சீசன் விரைவில் துவங்கும் என தெரிகிறது.

இந்தியாவின் தேசிய கனி, முக்கனிகளில் முதல் கனி, கனிகளின் அரசன், தெய்வீகக்கனி என்று பல சிறப்பு பெயர்களுடன் விளங்கும் மாம்பழத்தில் புரதசத்து, கொழுப்புசத்து, தாதுபொருட்கள், நார்ச்சத்து, கார்போஹைட்ரேட், சுண்ணாம்புசத்து, இரும்புசத்து, கரோட்டீன், வைட்டமின் பி, வைட்டமின் சி போன்ற சத்துப்பொருட்கள் அடங்கியுள்ளது. மாம்பழம், மாங்காய், மாம்பிஞ்சு, மாவிலை, மாம்பூ, மாம்பட்டை, விதைபருப்பு போன்றவை இந்திய மருத்துவ முறையில் பயன்படுத்தப்படுகிறது. உடலுக்கு வலிமையும், பொலிவும் கொடுக்கும் மாம்பழத்திற்கு செரிமானத்தை தூண்டும் சக்தியும் உண்டு. உலக அளவில் இந்தியா 8.5 சதவீதத்திற்கும் அதிகமாக மா உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது. இதில் 0.1 சதவீதம் மட்டுமே ஜாம், ஜெல்லி, பழக்கூழ், பழரசம், உலர்ந்த பழத்துண்டு, உறுகாய் என பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் ஆந்திரபிரதேசம், உத்திரபிரதேசம், பீகார், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் மா உற்பத்தியில் முன்னோடியாக விளங்குகிறது.

தமிழகத்தில் தர்மபுரி, சேலம், மதுரை, தேனி, திண்டுக்கல், வேலூர், விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிக அளவில் மா பயிரிடப்பட்டுள்ளது. அப்போன்சா, பங்கனப்பள்ளி, ஹிமாயுதீன், சுவர்ணரேகா, சவுசா, கேசர் ஆகிய ரகங்கள் ஏற்றுமதிக்கு உகந்தவையாக உள்ளது. வெப்பமண்டல பயிரான மாவிற்கு ஆம்பிரம், எகின், சிஞ்சம், கொக்கு, சூதம், சேகரம், குதிரை, ஓமை, சேதாரம், மாழை, மாந்தி என பைந்தமிழ் பெயர்களும் உண்டு. செங்கவரிக்காய், திருவரம்பு, கற்கண்டு, அதிமதுரம், பொட்டல், சூரங்குடி, செட்டி ஊட்டு, மஹாராணி ஊட்டு போன்ற குமரி மாவட்டத்தில் மட்டும் கிடைக்கும் ரகங்கள் இடைப்பருவத்திலும் காய்க்கிறது.குமரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மாம்பழத்திற்கு தனி

சுவை உண்டு. எனவே இங்குள்ள மாவிற்கு கிராக்கி அதிகம். இந்த ஆண்டு மாங்காய் விளைச்சல் கடந்த ஆண்டை விட அதிகமாக காணப்படுகிறது. தற்போது குமரி மாவட்டத்தில் வெளி மாவட்டங்களில் இருந்து மாம்பழங்கள் அதிகளவு விற்பனைக்கு வர துவங்கியுள்ளது. தற்போது கிலோ 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. குமரி மாவட்டத்தில் விளையும் சுவை மிகுந்த செங்கவரிக்காய் உள்ளிட்ட மாங்காய் சீசன் சற்று தாமதமாகி உள்ளதால் இன்னும் ஓரிரு வாரங்களில் விற்பனைக்கு வர துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மஞ்சள் இருப்பு வைக்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,01:05 IST

கோவை: "விவசாயிகள் மஞ்சள் இருப்பு வைத்து விற் பனை செய்து பயனடையலாம்' என, கோவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தெரிவித் துள்ளது. கோவை ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் ஆறுமுகராஜன் அறிக்கை:கோவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் மஞ்சள் ஏலம் மாலை 6.00 மணியளவில் நடக்கிறது. 18ம் தேதி நடந்த ஏலத்தில் 15 வியாபாரிகள் பங்கேற் றனர். அதில், மஞ்சள் 434 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி மஞ்சள் குறைந்த பட்சமாக குவிண் டால் ரூ.8,800க்கும், அதிகபட்சமாக ரூ.9,600க்கும் ஏலம் போனது. கிழங்கு மஞ்சள் குவிண்டால் ரூ.8,499க்கும், அதிகபட்சமாக ரூ.8,906க்கும் ஏலம் சென்றது. இவ்விற்பனைக் கூட பகுதி விவசாயிகள் மஞ்சள் இருப்பு வைத்தும், விற்பனை செய்தும் பயன்பெறலாம். இவ்வாறு, ஆறுமுகராஜன் அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

**கறி கண்காட்சி: போட்டியாளர்களுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,00:55 IST

கோத்தகிரி: கோத்தகிரியில் நடக்கும் காய்கறி கண்காட்சியில் போட்டியாளர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோத்தகிரி நேரு பூங்காவில் ஆண்டுதோறும் காய்கறிக் கண்காட்சி நடத்தப்படுகிறது. நடப்பாண்டில், மே மாதம் 14 மற்றும் 15ம் தேதிகளில் நான்காவது

காய்கறி கண்காட்சி நடக்கிறது. காய்கறி தோட்டங்கள் அமைத்துள்ள போட்டியாளர்கள், காய்கறி கண்காட்சி போட்டியில் கலந்து கொள்வதற்காக விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வழங்கப்படும் படிவங்களைப் பெற்றுக்கொண்டு, போட்டியில் பங்கேற்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மே மாதம் முதல் தேதிக்குள் வழங்க வேண்டும். விருப்பம் உள்ளவர்கள் காய்கறிக் கண்காட்சி போட்டியில் கலந்துகொண்டு பயன்பெறலாம். மேலும், விபரங்கள் அறிய கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

**நெல், கரும்பு, வாழை பயிர்களை பாதுகாக்க கொடிங்கால் வடிகாலை தூர்வார கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 21,2011,01:50 IST

குளித்தலை: வரும் மழைக்காலங்களில் விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ள நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, கோரை பயிர்கள் மழைநீரில் இருந்து பாதுகாக்க, பொதுப் பணித்துறையினர், பரளியில் இருந்து பெட்டவாய்த்தலை வரையுள்ள கொடிங்கால் வடிகால் வாய்க்காலை தூர்வார வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். குளித்தலை அருகே கே.பேட்டை பஞ்சாயத்து, வீரவள்ளியில் இருந்து கட்டளை மேட்டுவாய்க்காலில் இருந்து கோட்டமேடு, வதியம், வாலாந்தூர், பரளி, மேட்டுமருதூர், குமாரமங்கலம், மேல ஆரியம்பட்டி வழியாக பெட்டவாய்த்தலை தேவஸ்தானம், தோகைக்கரையில் தென்கரை பாசன வாய்க்காலுடன் இணைந்து காவிரி ஆற்றில் ஒன்று சேருகிறது. கொடிங்கால் வடிகால் வாய்க்கால் 150 கிராமங்களில் உள்ள பிரிவு பாசனம் மற்றும் வடிகால் வாய்க்கால் தண்ணீர் அனைத்தும் கொடிங்கால் வடிகால் வாய்க்காலில் இணைகிறது. கண்டியூர், கோட்டமேடு, வாலாந்தூர், பரளி, தண்ணீர்பள்ளி, ராஜேந்திரம், மேட்டுமருதூர், குமாரமங்கலம் ஆகிய முக்கிய விவசாய பகுதிகளில் பயன்படுத்தப்படும் பாசனம், வடிவு கண்ணாறு (வாய்க்கால்கள்) சரிவர தூர்வாரப்படாமல் விவசாயம் செய்ய முடியாத நிலையில் பாசன வாய்க்காலில் இடையூறாக இருந்து வருகிறது. விவசாயத்துக்கு தண்ணீர் பாய்ச்சவும், தண்ணீர் வடிய முடியாமலும் இருக்கிறது. இதனால் விவசாயத்தில் எதிர்பார்த்த லாபம் மற்றும் அதிகளவு விளைச்சல் பெற முடியவில்லை. இப்படிப்பட்ட நிலையில் கொடிங்கால் வாய்க்கால் பரளி, மேட்டுமருதூர், குமாரமங்கலம், பெட்டவாய்த்தலை வரை, வாய்க்காலில் செடி, கொடிகள் வளர்ந்து தண்ணீர் வடியமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வரும் மழைக்காலங்களில் விவசாயிகள் பயிரிடப்பட்டுள்ள நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, கோரை பயிர்கள் மழைநீரில் இருந்து பாதுகாக்க பொதுப் பணித்துறையினர், பரளியில் இருந்து பெட்டவாய்த்தலை வரையுள்ள கொடிங்கால் வடிகால் வாய்க்காலை தூர்வார

வேண்டும். பரளி, மேட்டுமருதூர், ராஜேந்திரம், கூடலூர் பகுதியில் விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பாசனம், வடிகால் வாய்க்கால்களையும் தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மிளகாய்க்கு விலை இல்லை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,22:30 IST

அம்பிளிக்கை:பச்சை மிளகாய்க்கு விலை கிடைக்காததால், அம்பிளிக்கையில் விவசாயிகள் வற்றலுக்காக செடிகளிலேயே பழுக்க விட்டுள்ளனர்.ஒட்டன்சத்திரம்,அம்பிளிக்கை,ஓடைப்பட்டி, வாடிப்பட்டி,சிந்தலப்பட்டியில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ பச்சை மிளகாய் விலை 10 ரூபாய்க்கும் அதிகமாக விற்றது.கடந்த சில நாட்களாக இதன் விலை தொடர்ச்சியாக குறைந்து 10 ரூபாய்க்கும் கீழ் விற்றது. ஆனால் மிளகாய் வற்றல் கிலோ 80 ரூபாய்க்கும் அதிகமாக விற்கிறது. இதனால் மிளகாயை பச்சையாக விற்றால் கட்டுபடியான விலை கிடைக்காது என்பதால், செடிகளில் அப்படியே பழுக்க வைத்து,உலர வைத்து வற்றலாக மாற்றும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயி பொன்னுச்சாமி கூறுகையில், நன்கு விளை ந்த பச்சை மிளகாயை பறித்து மார்க்கெட்டிற்கு அனுப்பினேன். தற்போது விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் பச்சையாக பறிக்காமல் செடிகளிலேயே பழுப்பதற்கு விட்டுள்ளேன். மிளகாய் வற்றலுக்கு ஓரளவு விலை கிடைக்கிறது என்றார்.

**பெரியாறு அணையில் நீர்மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,22:08 IST

கூடலூர்: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த மூன்று நாட்களாக மழை பெய்து வருகிறது. அணைக்கு, நீர்வரத்து வினாடிக்கு 208 கன அடி. இதனால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து 117.80 அடியாக உள்ளது. நீர் இருப்பு 2231 மில்லியன் கன அடி. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.வைகை அணையின் நீர்மட்டம் 53.28 அடி. நீர்வரத்து வினாடிக்கு 35 கன அடியாகவும், நீர்திறப்பு வினாடிக்கு 60 கன அடியாகவும் உள்ளது. நீர் இருப்பு 2452 மில்லியன் கன அடி. மழையளவு (மி.மீ.,): பெரியாறு 24.2, தேக்கடி 7.6, கூடலூர் 4, உத்தமபாளையம் 33, கொடைக்கானல் 4.

**வாழைப்பழம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,22:06 IST

தேனி:ஒரு கிலோ வாழைப்பழத்தின் விலை 10 ரூபாயாக உயர்ந்துள்ளது.தேனி மாவட்டத்தில் ஆறாயிரம் எக்டேருக்கும் அதிக பரப்பில் "ரொபஸ்டா' என்ற பச்சை வாழை சாகுபடி நடந்து வருகிறது. பழுத்த உடன் மஞ்சள் கலரில் காணப்படும் இந்த வாழைப்பழங்களுக்கு வடமாநிலங்கள், வட மாவட்டங்களில் நல்ல கிராக்கி உள்ளது. அங்குள்ள வியாபாரிகள் இங்கு வந்து தங்கி விவசாயிகளுக்கு அட்வான்ஸ் கொடுத்து வாழைப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர். ஒரு கிலோ வாழைப்பழம் 10 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சில்லரை மார்க்கெட்டில் ஒரு பழம் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஒரு தாருக்கு 400 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கிறது. இதனால் வாழை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**மானாவாரி விவசாய பணிகள் மும்முரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,22:06 IST

தேவாரம்:தேவாரம் பகுதியில் பெய்யும் கோடை மழையால் மானாவாரி விவசாயப் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம், தம்மிநாயக்கன்பட்டி, டி.மீனாட்சிபுரம், சங்கராபுரம் பகுதியில் இரண்டாயிரம் ஏக்கர் மானாவாரி விவசாயம் நடக்கிறது. பங்குனியில் இப்பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்தது. இந்த மழையில் கிடைத்த ஈரப்பதத்தில் கோடை உழவு பணிகளை விவசாயிகள் மேற்கொண்டனர். சித்திரை பட்ட விதைப்பிற்கு நிலக்கடலை, எள், மக்காசோளம், சோளம் ஆகிய தானிய பயிர்களை தயார் நிலையில் வைத்துள்ளனர். இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக இப்பகுதியில் கோடைமழை விட்டு விட்டு பெய்து வருகிறது. இது மானாவாரி விவசாயத்திற்கு ஏற்றதாக இருப்பதால், தற்போது விதைப்பு பணி மும்முரமாக நடந்து வருகிறது.

**குறைந்து வரும் நீர் மட்டம்குடிநீர் பிரச்னை அபாயம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,22:03 IST

தேவதானப்பட்டி:பெரியகுளம் தாலுகாவில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளான கண்மாய், குளங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளதால் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துள்ளது. இதனால் கிராம ஊராட்சிகளில் குடிநீர் பிரச்னை தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பெரியகுளம் தாலுகாவில் உள்ள ஜி.கல்லுப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, சில்வார்பட்டி, ஜெயமங்கலம், குள்ளப்புரம் உட்பட 17 கிராம ஊராட்சிகள் உள்ளன. 90 மேற்பட்ட உட்கடை கிராமங்களும் உள்ளன.

இக்கிராமங்களில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்க அந்ததந்தப் பகுதிகளில் உள்ள கண்மாய், குளங்களில் ஆழ்துழைக்கிணறுகள் அமைத்து அதில் கிடைக்கும் நீரை சப்ளை செய்து வருகின்றனர்.

தற்போது கடும் வறட்சி நிலவுவதால் நீர்நிலைகளில் நீர் வற்றிவிட்டது. இதனால் நிலத்தடிநீர் மட்டம் வெகுவாய் குறைந்துள்ளது. குடிநீர் வழங்கி வந்த ஆழ்துழைக்கிணறுகளில் கிடைத்துவந்த நீரின் அளவு வெகுவாக குறைந்துள்ளது.மூன்று, நான்கு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் சப்ளை செய்த ஊராட்சிகளில் தற்போது வாரம் ஒருமுறை நீர் சப்ளை செய்யப்படுகிறது.மழை பெய்தால் மட்டுமே குடிநீர் பிரச்னையை தீர்க்க முடியும் இல்லை என்ற நிலை பல ஊராட்சிகளில் உள்ளது. இதனால் வரும் நாட்களில் மக்கள் குடிநீர் கிடைக்காமல் சிரமப்படும் அபாய நிலை உள்ளது.

**உயரும் பருப்பு; குறையும் பூண்டு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,22:38 IST

சிவகங்கை:வரத்து அதிகரித்துள்ளதால், கிலோ 200 ரூபாய்க்கு விற்ற மலைப்பூண்டு, 160 ஆக குறைந்தது.சிவகங்கையில் மளிகை பொருள் விலை விபரம் (கிலோ):
துவரம் பருப்பு- 65; அதில் 2 வது ரகம் -58; தட்டப்பயறு-56; 2 வது ரகம் -47; கடலை பருப்பு- 39; 2 வது ரகம் -36; உளுந்தம் பருப்பு- 70; 2 வது ரகம் -68; வெள்ளை கொண்டக் கடலை -64; 2 வது ரகம் 56; சிவப்பு கொண்டக்கடலை-36; 2 வது ரகம்- 31; 68க்கு விற்ற பாசிப் பருப்பு-70; 2 வது ரகம் -69; பாசிப் பயறு-66; 2 வது ரகம் -59; மொச்சைப் பயறு- 50; வெள்ளை மொச்சை- 70; பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 28; 65 க்கு விற்ற மல்லி- 70; 56 க்கு விற்ற 2 வது ரகம் -58; புளி- 65; பழைய புளி -78.பொரி கடலை -45; வத்தல் புதியது- 95; பழையது-65; 200க்கு விற்ற மலைப் பூண்டு-160; 130க்கு விற்ற தரப்பூண்டு- 80.

வெல்லம் -32; கருப்பட்டி (வேம்பார்)- 84; சர்க்கரை -29; சோம்பு- 140; வெந்தயம்- 520; கசகசா- 280; சீரகம்-180; கடுகு- 380; மிளகு -280; மஞ்சள் -180 ரூபாய்.
அரிசி(கிலோ): 25 க்கு விற்ற கல்சர் பொன்னி- 22; புதியது- 23.டீலக்ஸ் பொன்னி- 24; புதியது- 22; ஐ.ஆர்.20 -20; செல்லப்பொன்னி -22; புதியது- 20.
பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்.20 பச்சரிசி- 22; இட்லி அரிசி- 23; கோதுமை -24; சோளம் -16; 18 க்கு விற்ற கம்பு -19; 17 க்கு விற்ற கேப்பை -18; வரகரிசி -36 ரூபாய்.
எண்ணெய்: 84 க்கு விற்ற கடலை எண்ணெய் -88; 62க்கு விற்ற பாமாயில் -67; நல்லெண்ணெய் -110, தேங்காய் எண்ணெய் -120 ரூபாய்.

## ஒரு அணை ஓடையானது கோடையின் தேவையை சமாளிக்குமா சிறுவாணி? மழை தருமோ மேகம்



அலை அடிக்கும் தண்ணீருடன் அழகாக காட்சி அளித்த சிறுவாணி அணை இப்போது ஓடை போல காட்சி அளிக்கிறது. தண்ணீர் வற்றியதால் கோவைக்கு குடிநீரை உறிஞ்சி அனுப்பும் 3 வால்வுகளும் தண்ணீருக்குமேலே தெரிவதை படத்தில் காணலாம்.

கோவை,ஏப்.21–

சிறுவாணியின் நீர்மட்டம் மள,மள என்று குறைவதால் 3 வால்வுகளும் தண்ணீருக்கு மேலே தெரிகிறது. 4–வது வால்வு மூலம் கோவைக்கு குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. கோடைகாலத்தின் நிலைமையை சமாளிக்க 4 நாளுக்கு ஒருமுறை குடிநீர் வினியோகம் செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சிறுவாணி குடிநீர்

கோவை நகர மக்களின் குடிநீர் ஆதாரமாக சிறுவாணியும், பில்லூர் அணையும்

விளங்கி வருகின்றன. இயற்கை கொடுத்த கொடையாக விளங்கும் சிறுவாணி, கேரள வனப்பகுதியில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 859 மீட்டர் உயரத்தில் சிறுவாணி அணை உள்ளதால், ராட்சத மோட்டார்களை வைத்து உறிஞ்சாமலே, புவியீர்ப்பு விசை அடிப்படையில் கோவையை நோக்கி ராட்சத குழாய்கள் மூலம் வந்தடைகிறது. சிறுவாணி அணையில் இருந்து 1½ கிலோ மீட்டர் தூரம் சுரங்கப்பாதை வழியாக தமிழ்நாட்டு எல்லையை வந்தடைகிறது. அங்கிருந்து சில கிலோ மீட்டர் தூரம் பாறைகள் வழியாக உருண்டோடி, கோவை குற்றாலம் அருகில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தை வந்து சேருகிறது. அங்கு சுத்திகரிக்கப்பட்டு 3 பகிர்மாண குழாய்கள் வழியாக கோவை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு 3 பிரிவாக சிறுவாணி குடிநீர் செல்கிறது.

450 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட பகிர்மாண குழாய் மூலம் கோவையின் காந்திபார்க் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்கிறது. அடுத்து 500 மில்லி மீட்டர் விட்டம் உள்ள குழாய் மூலம் வடவள்ளி மற்றும் கோவைபுதூருக்கு செல்கிறது. 1000 மில்லி மீட்டர் விட்டம் உள்ள பகிர்மாண குழாய் மூலம் சாய்பாபாகாலனியில் உள்ள பாரதிபார்க் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு வந்தடைகிறது. சிறுவாணி குடிநீர் திட்டத்தில் இருந்து 10 பேரூராட்சிகளும், 22 ஊராட்சிகளும், கோவை மாநகராட்சியும் பயன்பெற்று வருகிறது.

நீர்மட்டம் குறைகிறது

கேரளாவில் மழை பெய்யும் காலமான தென்மேற்கு பருவமழை காலத்தில் சிறுவாணி அணைப்பகுதியில் அதிக அளவு மழை பெய்யும். வடகிழக்கு பருவமழை காலத்தில் குறைந்த அளவு மழை பெய்யும். கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தில், போதிய மழை பெய்யாததால் இந்த அணையின் மொத்த நீர்மட்ட கொள்ளவான 878.50 மீட்டரை தொடவில்லை. இருந்தாலும் ஓரளவு நிலைமை சமாளிக்கப்பட்டு வந்தது. தற்போது கோடைகாலம் தொடங்கி விட்டதால் சிறுவாணியின் நீர்மட்டம் தினமும் 10 சென்டிமீட்டர் வீதம் மள,மள என்று குறைந்து வருகிறது. இதனால் 2 வால்வுகள் தண்ணீருக்கு வெளியே உள்ளன. 3–வது வால்வு மட்டும் தண்ணீரை தொட்டுக்கொண்டு இருப்பதால் 4–வது வால்வு வழியாக மட்டுமே கோவைக்கு தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

சிறுவாணியின் நேற்றைய நீர்மட்டம் 866.35 மீட்டராக இருந்தது. அணையில் இருந்து 863.34 மீட்டர்வரை தண்ணீர் எடுக்கலாம். கோவையில் கோடை மழை பெய்தபோது சிறுவாணியிலும் 18 மில்லிமீட்டர் அளவுக்கு மழை பெய்தது. இருந்தாலும் இந்த மழை போதுமானதாக இல்லை.

அளவு குறைப்பு

சிறுவாணியில் இருந்து தினமும் 85 எம்.எல்.டி(8கோடி லிட்டர் அளவுக்கு) தண்ணீர் எடுத்தால், அடுத்த மாதம் 15–ந்தேதிவரைதான் தண்ணீரை எடுக்க முடியும். எனவே 70 எம்.எல்.டி(7கோடி லிட்டர்). ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி கமிஷனர் அன்சுல்மிஸ்ரா கூறும்போது, தென்மேற்கு பருவமழை காலம்வரை நிலைமையை சமாளிப்பதற்காக, சிறுவாணி குடிநீர் வினியோகிக்கப்படும் பகுதிகளில் 2 நாட்களுக்கு ஒருமுறை வினியோகிக்கப்பட்ட நிலைமையை மாற்றி, 4 நாட்களுக்கு ஒருமுறை வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த மாதம் 25–ந்தேதிவரை சிறுவாணியில் இருந்து குடிநீரை வினியோகிக்க முடியும் என்றும், அதன்பிறகு 5 நாட்களுக்கு தினமும் 4 கோடி லிட்டர் அளவுக்கு சிறுவாணியில் இருந்து குடிநீரை எடுப்பதன் மூலம் அடுத்த மாதம் 30–ந்தேதிவரை நிலைமையை சமாளிக்கலாம். அதன்பிறகு தென்மேற்கு பருவமழை காலம் தொடங்கி விடுவதால் நிலைமையை சமாளித்துவிடலாம்.

கோவையின் குடிநீர் பிரச்சினை திருப்திகரமாக இல்லாவிட்டாலும், நிலைமையை சமாளிக்கும் அளவுக்கு ஓரளவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகராட்சி கமிஷனர் அன்சுல்மிஸ்ரா தெரிவித்தார்.

26 லாரிகள் மூலம் கோவை நகரம் முழுவதும் கூடுதலாக குடிநீரை வினியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமாளிக்க முடியுமா?

பில்லூர் முதல்கட்ட திட்டத்தின் மூலம், கோவைக்கு தினமும் 6 கோடியே 40 லட்சம் லிட்டர் வினியோகிக்கப்படுகிறது. இருந்தாலும் வினியோக முறை சரியில்லாததாலும், சிங்காநல்லூர், மசக்காளிபாளையம், ராமதாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பெருகி வரும் குடியிருப்புகளுக்கு தகுந்தவாறும் பெரிய அளவிலான குழாய்கள் பதிக்கப்படாததால், 10 நாள், 15 நாளுக்கு ஒருமுறை இந்த பகுதிகளில் குடிநீர் வினியோகம் செய்யும் நிலை உள்ளது.

ரூ.140 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் பில்லூர் 2–வது கட்ட திட்டம் முழுமை அடைந்தால் மட்டுமே சிங்காநல்லூர் உள்ளிட்ட கோவையின் பகுதிகளுக்கு போதிய குடிநீரை வினியோகிக்க முடியும். இந்த திட்டம் ஜூன், ஜூலையில்தான் முழுமை அடையும் என்று தெரிகிறது. இருந்தாலும், பில்லூர் 2–வது கட்ட திட்டத்துக்காக பதிக்கப்பட்டுள்ள பகிர்மாண குழாய்களில், முதல்கட்ட திட்டத்தில் இருந்து ராட்சத மோட்டார் பம்பு மூலம் கூடுதலாக 20 எம்.எல்.டி.(2கோடி லிட்டர்) வினியோகிக்கும் பணியும் தொடர்ந்து தாமதம் ஆகி வருகிறது. இந்த பணிகள் இந்த

மாத இறுதியில்தான் முடிவடையும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பில்லூரில் இருந்து கூடுதல் குடிநீரை வினியோகிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையை துரிதப்படுத்தினால் மட்டுமே கோவையின் குடிநீர் பிரச்சினையை சமாளிக்க முடியும். எனவே இதற்கான நடவடிக்கையில் அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபடுவதுடன், கோவையில் ஒரு பகுதியில் 4 நாட்களுக்கு ஒருமுறை என்றும், மற்றொரு பகுதியில் 10 நாட்களுக்கு ஒருமுறை என்றும் ஏற்றத்தாழ்வுகளுடன் வினியோகிக்கப்படும் வினியோக முறையை சீரமைத்து அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீரை வினியோகிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உணவு தானியங்கள், பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட வேளாண் விளைபொருள் ஏற்றுமதி ரூ.40,000 கோடி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சென்ற நிதி ஆண்டில் விவசாய விளைபொருள்கள் ஏற்றுமதி ரூ.40,000 கோடியாக உயர்ந்து இருக்கும் என விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருள் மேம்பாட்டு ஆணையம் மதிப்பீடு செய்துள்ளது.

14 வகை பொருள்கள்

கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் இந்த ஆணையத்தின் ஏற்றுமதி ரூ.35,000 கோடியாக இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் இதைக் காட்டிலும் 14 சதவீதம் அதிகமாக இருக்கும். ஆண்டுதோறும் ஏற்றுமதி 15–20 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருவதாக மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் அசித் திரிபாதி

தெரிவித்தார்.

ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் 14 வகையான வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதியை கண்காணித்து வருகிறது. இவற்றுள் பூந்தோட்டக் கலை பொருள்கள், பழங்கள், காய்கறிகள், இறைச்சி, இறைச்சி தயாரிப்புகள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், தானியங்கள், தானிய தயாரிப்புகள், மூலிகை செடிகள் போன்றவை அடங்கும்.

பங்களிப்பு

"உணவுப் பதப்படுத்துதல் துறையில் வளமான வர்த்தக வாய்ப்புகள் உள்ளதால் இத்துறையில் அதிக முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நடப்பு நிதி ஆண்டில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மட்டும் ரூ.20,000 கோடியாக இருக்கும். உலக அளவில் மேற்கொள்ளப்படும் வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 1.4 சதவீதமாகவும், இறக்குமதியில் பங்களிப்பு 1.2 சதவீதமாகவும் உள்ளது" என திரிபாதி மேலும் கூறினார்.

சர்வதேச அளவில் விளைபொருள்கள் வர்த்தகத்தில் ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, பிரேசில், கனடா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. நம் நாட்டிலிருந்து ஆண்டுதோறும் ரூ.74,000 கோடிக்கு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் சுமார் ரூ.40,000 கோடிக்கான பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

## 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மத்திய சிறப்பு அமைச்சரவை குழு, ஒரு மாதத்திற்கு முன்னர் 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்தது. இதனை தொடர்ந்து, மத்திய அரசு அண்மையில் இதற்கு அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது. இருப்பினும், இந்த அனுமதியால் வர்த்தக வட்டாரங்கள் மகிழ்ச்சி அடையவில்லை.

ஏனென்றால், கடந்த சில வாரங்களாக சர்வதேச சந்தைகளில் சர்க்கரை விலை மிகவும் குறைந்து வருகிறது. மார்ச் 22–ந் தேதியிலிருந்து இதுவரையிலான காலத்தில் 11 சதவீதம் சரிவடைந்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் அனுமதி அளித்து இருந்தால் அதிக லாபம் ஈட்டியிருக்க முடியும் என வர்த்தக நிபுணர்கள் தெரிவித்தனர்.

வரும் 2011–12–ஆம் பருவத்தில் நாட்டில் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, தேவைப்பாட்டைக் காட்டிலும் 15 லட்சம் டன் அதிகமாகும். இதனால் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## விலை ஏற்றத்துக்கு குறைந்த வாய்ப்பு: அறுவடை செய்த சூரியகாந்தி விதையை உடனே விற்பது நல்லது விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

விலை ஏற்றத்துக்கு குறைந்த வாய்ப்பு உள்ளதால் அறுவடை செய்த சூரியகாந்தி விதையை உடனே விற்பனை செய்வது நல்லது என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

சூரியகாந்தி

சூரிய காந்தி உலகம் முழுவதும் பயிரிடப்படும் முக்கிய உணவு எண்ணெய் பயிராகும். கடந்த 2008–09 ஆம் ஆண்டில் சூரியகாந்தி விதை உற்பத்தி 33.3 மில்லியன் டன்கள், அதாவது மொத்த எண்ணெய்வித்து உற்பத்தியில் உலக அளவில் 8.5 சதவீதமாகும். ஐரோப்பா, ரஷ்யா, உக்ரைன், அர்ஜென்டினா, அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் சூரியகாந்தி விதை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் உற்பத்தியில் ரஷ்யா அதிக அளவிலும், அதை தொடந்து உக்ரைன் நாடும்

உள்ளது.

உற்பத்தி திறன்

நமது நாட்டில் கர்நாடகா, மராட்டியம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியபங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் கடந்த 2008–09 ஆம் ஆண்டில் சூரியகாந்தி பயிர் செய்யப்பட்ட பரப்பு .29 லட்சம் எக்டேராகும். இதன் மூலம் உற்பத்தி .34 லட்சம் டன்களாகவும், உற்பத்தி திறன் கிலோவுக்கு 1334 ஆகவும் இருந்தது.

கரூர், திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவடங்கள் சூரியகாந்தி பயிர்டப்படும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழகத்தில் வெள்ளகோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஆகியவை முக்கிய சூரியகாந்தி சந்தைகளாகும்.

சேமித்து விற்கலாமா....

தமிழகத்தில் தற்போது விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தி விதையை உடனடியாக விற்கலாமா அல்லது நல்ல விலை கிடைக்க சிறிது காலம் சேமித்து வைத்து விற்கலாமா என்பதை தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர்.

சந்தைபடுத்துவதில் முக்கிய முடிவுகளை விவசாயிகள் எடுப்பதற்கு வசதியாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மை புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையமானது, வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 11 ஆண்டுகளாக நிலவிய சூரியகாந்தி விலையை ஆய்வு செய்தது.

ஆராய்ச்சி முடிவு

ஆய்வு முடிவில் ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் ஒரு கிலோவுக்கு ரூ.27 முதல் ரூ.30 வரை விலை கிடைக்க வாய்ப்பு உள்ளதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. சந்தையில் 100 மில்லி லிட்டர் அளவில், 40 முதல் 42 கிராம் எடை இருக்கும் சூரியகாந்தி விதைகளுக்கு அதிக விலை கிடக்கும் வாய்ப்பு உள்ளது. இதே போல் விதையின் எடையை பொறுத்து விலை மாறுபடும்.

மேலும் விலை ஏற்றத்துக்கு மிகக் குறைந்த வாய்ப்பு உள்ளதால், அறுவடை செய்த சூரியகாந்தி விதையை உடனடியாக விற்பனை செய்யுமாறு விவசாயிகளுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

## 'கூர்கன்' பயிரில் நூற்புழு மேலாண்மை

மூலிகைப்பயிர்களில் முக்கியமான பயிராக கருதப்படுவது கூர்கன். இந்த பயிர் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பிரேசில், தாய்லாந்து, மியான்மர் ஆகிய நாடுகளில்

பயிரிடப்பட்டு வருகிறது. இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, மராட்டியம், ராஜஸ்தான் மாநிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கூர்கனில் நூற்புழு தாக்குதல்

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, சுமார் 1000 டன் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மருந்து கூர்கனில் வேர் முடிச்சு நூற்புழுக்களின் தாக்கம் மிகுதியாக இருக்கும் நிலையில் பொருளாதார சேத நிலையும் மிகுதியாக இருக்கும்.

நூற்புழுக்கள் கூர்கனின் வேர்ப்பகுதியை தாக்குவதால் பயிருக்கு தேவையான நீர், ஊட்டசத்துக்கள், பயிருக்கு செல்வது தடைப்படுகிறது. இந்த தாக்குதல் தொடர்வதால் பயிர் வளர்ச்சி குறைந்து, கிழங்குகள் எடை குறைந்து விடும். இது விவசாயிகளுக்கு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும்.

தவிர்ப்பது எப்படி?

★ நூற்புழுக்கள் தாக்குதலை தடுக்க மண் பரிசோதனைகளை செய்து, வேர் முடிச்சு நூற்புழு இல்லாத நிலத்தில் கூர்கன் சாகுபடி செய்யலாம்.

★ சுழற்சி முறையில் நூற்புழு தாக்காத சோளம், மக்காச்சோளம் போன்ற பயிர்களை பயிரிடலாம்.

★ செண்டு மல்லி பூச்செடியை வாய்க்கால் ஓரங்களில் ஊடு பயிராக நடவு செய்யலாம்.

★ 500 கிலோ வேப்பம்புண்ணாக்கை 1 ஹெக்டேர் நிலத்தில் போட்டு வைக்கலாம்.

★ நூற்புழு தாக்குதலின் அளவை பொறுத்து ஹெக்டேருக்கு 15 முதல் 25 கிலோ கார்போபியூரான் மருந்தை தெளித்து நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

இந்த முறைகளை விவசாயிகள் கடைப்பிடித்தால் வேர் முடிச்சு நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்தி, விளைச்சலை அதிகரித்து லாபம் பெறலாம்.

–தகவல்: செந்தில்குமார், அருள்மொழியான், தோட்டகலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு.

## சித்த–ஆயுர்வேத மருத்துவத்தில் புற்றுநோயை குணப்படுத்தும் 'காட்டாமணக்கு'



காட்டாமணக்கு செடியை படத்தில் காணலாம்.

மனிதர்களுக்கு, இயற்கை அளித்த நன்கொடையாக காட்டாமணக்கு விளங்குகிறது. முன்பெல்லாம் வேலி பயிராக வளர்ந்த காட்டாமணக்கு, தற்போது தமிழ்நாட்டில் ஹெக்டேர் கணக்கில் பயிரிடப்பட்டு வருகிறது.

காட்டாமணக்கு

திருவண்ணாமலை, வேலூர், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் காட்டாமணக்கு பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த பயிர் எல்லா இடங்களிலும் செழித்து வளரும் தன்மை கொண்டது. பிற மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது.

இதன் தாவரப்பெயர் ஜட்ரோபோ கர்கஸ். இதற்கு டாக்டர் என்று பொருள். காட்டாமணக்கு என்றால் எரிபொருளை கொடுக்கும் தாவரம் என்று பெயர். இது மிகச்சிறந்த மூலிகைப்பயிர் ஆகும். இந்த தாவரத்தில் இருந்து வரும் பால் போன்ற திரவம் பல் வலிக்கு சிறந்த நிவாரணியாக பயன்படுகிறது. பல் சொத்தை, பற்சிதைவை உண்டாக்கும் கிருமிகளை அழிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

என்னென்ன நோய்கள்?

ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆய்வாளர்கள் காட்டாமணக்கின் பாலில் ஜெட்ரோபின், கர்கேன் என்ற வீரியம் வாய்ந்த ஆல்கலாய்டுகள் இருப்பதை கண்டறிந்து உள்ளனர். இவை மேலைநாடுகளில் புற்றுநோய்க்கு மருந்து தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த திரவத்தை தேள், குளவி கொட்டிய இடத்தில் தடவினால் கொடுக்கு வெளியில் வருவதுடன், குணம் அளிக்கும் என்று 1962–ல் வாட் என்ற ஆய்வாளர் கண்டறிந்தார்.

காட்டாமணக்கு இலைச்சாறும் மருத்துவத்திற்கு உதவுகிறது. இதில் அபிஜெனின், விட்டெக்சின், ஐசோவிட்டெக்சின் என்ற மூலக்கூறுகள் அதிக அளவில் உள்ளன. இதைப்பயன்படுத்தி தயாரிக்கப்படும் மருந்துகள் மலேரியா, மூட்டுவலி, தசைவலி, மஞ்சள் காமாலை, புற்றுநோய், இருமல், கக்குவான், வீக்கம், நிமோனியா, வயிற்று வலி, டெட்டனஸ், வயிற்றுப்புண், வாத நோய்களை குணப்படுத்த வல்லது.

சாகுபடி செய்ய வேண்டும்

வேரில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் பாம்பு கடிக்கு மருந்தாகின்றன. வேரை இடித்து சாறாக்கி வாய் கொப்பளித்தால் பல் ஈறுகளில் இருந்து வடியும் ரத்த கசிவு குணமாகும். காட்டாமணக்கு எண்ணெய்யில் இருந்து தயாரிக்கப்படும் சோப்பு தோல்நோய்க்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. காட்டாமணக்கின் அனைத்து பாகங்களும், மருந்தாக பயன்படுத்தப்பட்டு வந்தாலும் இதன் வேரை மட்டும் மருத்துவப்பயனுக்காக நேரடியாக பயன்படுத்த முடியாது.

இதில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கிய பின்பே பயன்படுத்த முடியும். பல்வேறு நோய்களுக்கு மருந்தாக பயன்படும் காட்டாமணக்கை மருத்துவ பயனுக்காக விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும் என்பதே சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவ நிபுணர்களின் எதிர்பார்ப்பு.

–தகவல்: பரமாத்மா, வனிதா, வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,760-2,830

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
3,680-3,730

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
8,450-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,415-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,826-00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1குவிண்டால்(வரிஉள்பட) 12,000-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
11,000.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,150.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,435.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,095.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
550-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஏப்.20-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(30கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஏப்.20-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 10,967
2. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 15,403
3. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 14,341
4. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 15,607
5. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 15,747
6. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,215

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஏப்.20-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,500 | 96.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1100 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1620 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 118.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,330 | 90.00 |
| வனஸ்பதி | | |
| லிஸ்லி டப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | - |

## கோவை உழவர் சந்தை

கோவை,ஏப்.20-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 68-00 | காலிப்பிளவர் | ரூ. | 18-20 |
| கத்தரிக்காய் | ரூ. | 8-12 | பொறியல் தட்டை | ரூ. | 14-00 |
| வெண்டைக்காய் | ரூ. | 12-14 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 4-5 | தேங்காய் | ரூ. | 11-13 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6-7 | பட்டாணி | ரூ. | 44-56 |
| புடலை | ரூ. | 9-13 | பூண்டு | ரூ. | 100-110 |
| பீர்க்கன்காய் | ரூ. | 24-00 | கறிவேப்பிலை | ரூ. | 20-00 |
| சுரைக்காய் | ரூ. | 8-10 | அகத்தி | ரூ. | 15-00 |
| பாகற்காய் | ரூ. | 13-14 | வாழைக்காய் | ரூ. | 14-00 |
| கொத்தவரை | ரூ. | 14-00 | குடைமிளகாய் | ரூ. | 38-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 30-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 30-00 |
| மேராக்காய் | ரூ. | 18-00 | கறிபீன்ஸ் | ரூ. | 38-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 22-00 | புஷ்பீன்ஸ் | ரூ. | 34-36 |
| குண்டு மிளகாய் | ரூ. | 24-00 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 29-30 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10-00 | மாங்காய் | ரூ. | 16-18 |
| இஞ்சி | ரூ. | 32-00 | திராட்சை | ரூ. | 40-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 22-24 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 15-16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15-16 | கொய்யா1கிலோ | ரூ. | 24-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 22-00 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 26-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | மாம்பழம் | ரூ. | 40-70 |
| சக்கரைவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 28-00 | சாத்துக்குடி | ரூ. | 36-00 |
| முள்ளங்கி | ரூ. | 10-12 | நெல்லிக்காய் | ரூ. | 48-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-22 | ஆரஞ்சு | ரூ. | 66-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 9-10 | வெள்ளரி | ரூ. | 26-00 |
| நூல்கோல் | ரூ. | 18-00 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்துமல்லி | ரூ. | 22-26 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 18-00 | அவரை | ரூ. | 20-24 |
| முட்டைகோஸ் | ரூ. | 18-00 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 | மக்காச்சோளம் | ரூ. | 3,50-00 |
| புதினா | ரூ. | 16-00 | தர்பூசணி | ரூ. | 8-9 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.23800 |
| மிளகு (சேட்டன்) | ரூ.24000 |
| மிளகு (வயநாடன்) | ரூ.25300 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 1500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10500 |
| சுக்கு(புதியது) | ரூ.9000 |
| சுக்கு(பழையது) | ரூ.15000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10000 |
| கொப்பரை நாடன் | ரூ.6600 |
| கொப்பரை ராசு | ரூ.6450 |
| கொப்பரை தில்பசன் | ரூ.7000 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.6400 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6600 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23775 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23400 |
| ரப்பர் பால் | ரூ. 17900 |
| காப்பி | ரூ. 9500 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2000 |
| நேந்திரகாய் | ரூ. 1200 |
| இஞ்சி | ரூ. 1000 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,200.00 | 16,224.00 | 16200.00 |
| ஒரு கிராம் | 2,025.00 | 2,028.00 | 2,025.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 65,495.00 | 70,200.00 | 70,000.00 |
| ஒரு கிராம் | 70.10 | 70.20 | 70.00 |

தினகரன்

**மணிலா மூட்டை ரூ.4,400 ஆனது**

பதிவு செய்த நாள் 4/21/2011 1:44:18 AM



கடலூர்: ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மணிலாவுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் விளையும் விவசாய விளைபொருட்கள் கடலூர் முதுநகரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது மணிலா சீசன் என்பதால் நாளொன்றுக்கு சராசரியாக 500 மூட்டை மணிலா விற்பனைக்கு வருகிறது.

இப்போது 80 கிலோ மூட்டை ஒன்று அதிகப்படியாக ரூ.4 ஆயிரத்து 400க்கும், குறைந்த விலையாக ரூ.4 ஆயிரத்துக்கும் விற்கப்படுகிறது. இது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரல் ஒன்றாம் தேதியில் இருந்து இதுவரை 3 ஆயிரம் மணிலா மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.